மதுரை நகரத்தைப் பொறுத்தவரை, சட்டமன்ற உறுப்பினர் திருப்பதி அவர்கள் சொன்னதுபோல் மருத்துவ மனை பெரிதாக வேண்டும். பெரிய கட்டடங்களை மருத்துவ மனைகளுக்காகக் கட்டுவதற்கு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொஞ்சம் அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அந்தந்த டிப்பார்ட்மெண்டுக்கு கட்டடம் கட்டுவதற்கு ஓரளவுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். குறிப்பாக, மருத்துவத் துறை, கல்வி ஆகிய இரண்டு துறைகளிலும் அந்த அதிகாரம் ஓரளவுக்காவது இருக்க வேண்டும்.

போலீசார் பலர் இன்று தங்களுக்குச் சரியான வீடுகள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரையில் உள்ள ரிசர்வ் போலீஸ் லைன் கூட வசதியற்ற நிலைமையில் இருக்கிறது. தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவை ஒழுங்காக இருக்கும் வகையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். பிற பிற விஷயங்கள் பற்றியெல்லாம் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறோம். ஒரு கண்மாய் பண்டு போட இடைஞ்சலாக இருக்கிறது என்பன போன்ற வெட்டுப் பிரேரணைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் கவனித்து தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் விடுதலை செய்யப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலியில் 1—7—1971-ம் நாள் காலை 10-15 மணி அளவில் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை, கோவில்பட்டி தொகுதி உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் அன்று பிற்பகல் 2.10 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார் என்று திருநெல்வேலி டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து தகவல் வந்திருப்பதை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறை சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையில், சுமார் 41 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்லியதுபோல் பொதுப் பணித்துறைக்கு மானியமாக மொத்தம் ரூ. 51,73,00,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது பொதுப் பணித் துறைக்காக என்றாலும் அது பொதுப் பணத்துறை என்கிறார்கள். இந்தப் பொதுப் பணத்துறை பாதுகாப்பாகச் செலவிடப்படும் என்பதையும் அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.